சுகாதாரக்கேடும், மற்றும் பலவிதமான வியாதிகளும் பரவுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, சுற்றுலா விடுதிகளை அங்கே அரசாங்கமே கட்ட வில்லையென்றாலும், அங்கே வருகிற வருமானத்தை வைத்துக்கொண்டு, அரசாங்கம் அந்தந்த தர்காக்களுக்கு ஒதுக்கி, சுற்றுலா மாளிகை கட்ட இனியாவது ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எப்படிப்பட்ட வருமானம் வருகிறது என்ற விவரக்குறிப்பு என்னிடத்தில் இல்லை. வெளிநாட்டி லிருந்து அதிகமான பேர்கள் வந்து தங்குகிற இடங்களில் சுற்றுலா மாளிகைகளைக் கட்ட சுற்றுலா வாரியம் மேற்கொண்டிருக்கிறது. அந்தந்த இடங்களின் முக்கியத்துவத்துக்கு ஏற்ப, அவைகள் நிறைவேற்றப்படு கின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல், அரசாங்கமே சுற்றுலாத் துறை மூலம் கட்டாமல், வேறு பல வாய்ப்புகளிலிருந்து பணம் வருமேயானால் சுற்றுலா விடுதிகளைக் கட்டலாம். குறிப்பாக, அறநிலைய பாதுகாப்புத் துறை மூலமாக பல கோவில்களில், பல இடங்களில் சுற்றுலா மாளிகை எழுப்பப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட வசதிகள் இருந்தால் அந்த முயற்சி ஆராயப்படலாம்.

Seats in Medical Colleges.

* 128 Q.—THIRU N. DENNIS :
THIRU N. K. PALANISAMY : } Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to reduce the number of seats in the Medical Colleges in the State; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) இல்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இப்போது இருக்கும் எண்ணிக்கையால், 'ஓவர்-கிரௌடிங்' மூலமாக, மாணவர்களுக்கு வசதிக் குறைவு ஏற்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, குறைப்பதற்கு அரசாங்கம் ஆலோசனை நடத்துகிறதா என்ற கேள்வி கேட்கப்பட்டிருக் கிறது. இப்போது குறைக்க வேண்டிய நிலை இல்லை என்ற ஒரு கருத்து காரணமாக, இப்போது இந்த ஆண்டு குறைக்கப்படவில்லை, ஆனால் பொதுவாக, பயிற்சி பெறுகிற மாணவர்களுக்குக் கிடைக்கவேண்டிய எல்லா விதமான வாய்ப்புகளும் நல்ல முறையில் கிடைக்கவேண்டு மானால் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தால்தான் சிறப்பான பயிற்சி கொடுக்க முடியும் என்று மருத்துவ நிபுணர்கள்

1973 ஆகஸ்ட் 14]

தெரிவிக்கிறார்கள். அப்படிப்பட்ட அடிப்படையில் வாய்ப்பு ஏற்படுமானால், அந்த எண்ணிக்கை குறைக்கப்படும், அது மறுபரிசீலனைக்கு உரிய ஒன்றுதான் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, இந்தக் காலேஜில் படித்துவிட்டு 'ஹவுஸ்–சர்ஜன்களாக' இருந்த பிறகு 8 மாதம், 1 வருஷம் ஆன பிறகு கூட அவர்களுக்கு வேலை கிடைக்காமல் இருக்கிற காரணத்தால், போதுமான டாக்டர்கள் இல்லாத இடங்களில், அவர்களுக்கு வேலைவாய்ப்பு போட்டுக் கொடுக்கும் முறையில், அதிகமான ஹாஸ்பிடல்ஸ் திறக்க வழி வகுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நலத்துறைக்கு ஆகிற அவ்வளவு செலவையும், அரசாங்கத்தினுடைய வேறு துறையிலிருந்து வருகிற வருமானத்திலிருந்து பெற்று செலவழிக்கப்படுகிறது. ஏறத்தாழ 100-க்கு 9 விழுக்காடு தமிழக அரசு இப்போது செலவிட்டுக்கொண்டிருக்கிறது. இந்த அளவு பங்கீடு கூட வேறு பல மாநிலங்களில் இல்லை. ஒவ்வொரு ஆண்டும் ஹாஸ்பிடல்களில் 100 டாக்டர்கள் புதிதாக வேலைக்குச் சேர்க்கப்படுகிறார்கள். இதை அதிகப்படியாகச் செய்வதற்கு அரசாங்கத்திடம் நிதி வசதி இல்லை. ஆனால் டாக்டர்களாகப் பயிற்சி பெற்றவர்கள் அரசாங்க வேலையை எதிர்பார்த்துத்தான் பயிற்சி பெறுவது என்பது நல்லதல்ல, நாட்டுக்கும் உகந்தது அல்ல.

Rural Medical Centre at Tiruverkadu.

* 129 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Rotary Club has come forward to run a Rural Medical Centre at Thiruverkadu near Madras City; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) ரோட்டரி கிளப் இது பற்றி அரசினரை அணுகவில்லை, ஆனால், அண்மையில் ரோட்டரி கிளப் திருவேற்காட்டில் கிராம மருத்துவ நிலையம் ஒன்றைத் தொடங்கி உள்ளது.

THIRU N. DENNIS : May I know, Sir, whether the Government will approach other Organisations like the Lion's Club in similar matters?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Any private Organisation or any Benevolent Society may come forward to start any type of dispensary either in rural areas or in urban areas, because necessary expenditure is met by such an Association.